அலகுப்பரீட்சை (அலகு 2)

Unit Examination (Unit 2)

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தர) ப் பரீட்சை

General Certificate of Education (Adv. Level) Examination

அரசியல் விஞ்ஞானம் **Political Science**	23	T	I&II	2 மணி 30 நிமிடம் **Two hour 30 Minutes**

பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமற்ற விடையினைத் தெரிவு செய்க.

01. அரசியற் கற்கைக்குட்படும் பிரதான நிறுவனங்கள்.
    1. அரசியற்கட்சிகள்
    2. அமுக்கக்குழுக்கள்
    3. சிவில்சமூகம்
    4. அரசியல் கருத்தியல்கள்
    5. அரசு மற்றும் அரசாங்கம்

02. அரசியல் தத்துவம் என்பது
    1. புரதான கிரேக்கம் முதல் தற்காலம் வரை அரசியல் ஆய்வில் பயன்படுத்தப்படுகின்றது.
    2. அரசியல் விபரிப்புக்குப் பயன்படும் எண்ணக்கருக்களின் வரைவிலக்கணங்களை தெளிவுபடுத்தும்.
    3. அரசியல் தொடர்பில் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளை வெளிப்படுத்தி அதனை ஆய்வு செய்யும்.
    4. சமூகப் பிரிவுகளை அரசியலில் ஈடுபடுத்துவதற்கான வாய்ப்பைக் கொண்டிருக்கும்
    5. பிளேட்டோ, அரிஸ்டோட்டில் என்போர் இதன் முன்னோடிகளாவர்.

03. அரசியல் கருத்தியல் என்பது
    1. சமூக அரசியலுக்கு அழுத்தம் கொடுக்கும்.
    2. சமூகத்தில் பெரும்பான்மையினோரை ஈர்த்துக்கொள்ளும்.
    3. அரசியல் நம்பிக்கைகளை உள்ளடக்கி இருக்கும்.
    4. முதலாளித்துவப் பின்புலத்தில் தோற்றம் பெற்றது.
    5. தோற்றப்பாடுகள் பற்றிய விபரிப்புக்களை வெளிப்படுத்தும்.

04. அரசியல் கோட்பாடு என்பது
    1. காரணகாரியத் தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்படும்.
    2. மானியமுறை வீழ்ச்சியோடு ஆரம்பமானது.
    3. பிரச்சினையை விபரிப்பதற்காக கல்வியலாளர்கள் பயன்படுத்தும் விதிமுறைகளின் கருவிகள் ஆகும்.
    4. எண்ணக்கருவாக சூத்திரப்படுத்தப்படக் கூடியது.
    5. பிளேட்டோ முதல் இன்றுவரை காணப்படும் அரசியல் தத்துவங்கள் சம்பிரதாயங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது.

05. விஞ்ஞானக் கோட்பாடு என்பது
    1. ‘‘விஞ்ஞானரீதியான பார்வை’’ என்ற பின்புலத்தில் தோற்றம் பெற்றது.
    2. விஞ்ஞானக் கோட்பாட்டுக்கு உதாரணமாக சட்டம் தொடர்பாக ஜோன் ரோல்ஸ் எழுதிய கோட்பாட்டைக் குறிப்பிட முடியும்.
    3. மெய்ப்பிக்கக்கூடிய தரவுகளைக் கண்காணிக்கும்.
    4. நேர்கணிய அரசியல் கோட்பாடுகள் என அரசறிவியலில் அறியப்படுகிறது.
    5. உலகத்தில் நடைபெறுவது, ஏன் நடைபெறுகிறது என்பதனை தெளிபடுத்துவதனை நோக்காகக் கொண்டது.

06. அரசியல் நிறுவனம் என்பது
    1. சமூகவியல், பொருளியல் துறைகளில் நிறுவனம் பற்றிய கற்கை முக்கியம்பெறுகின்றது.
    2. முறைசார், முறைசாரா நிறுவனம் என வகைப்படுத்த முடியும்.
    3. குடும்பம் என்பதனை முறைசார் நிறுவனத்துக்கு உதாரணமாகக் குறிப்பிட முடியும்.
    4. அரசியல் கற்கைக்கு உட்படும் பிரதான நிறுவனங்களுள் அரசியல் கட்சியும் ஒன்றாகும்.
    5. சட்டதிட்டங்களின் அடிப்படையில் நிறுவனங்கள் ஒழுங்கமைந்துள்ளது.

07. லிபரல்வாதம் தொடர்பில் சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க.
    A. தனிமனித சுதந்திரத்தை வலியுறுத்துகின்றது.
    B. ஐரோப்பிய மானிமுறை வீழ்ச்சியோடு ஆரம்பமானது.
    C. முதலாளித்துவ பின்புலத்தில் தோற்றம் பெற்றது.
    D. இதற்கு ஆதரவாக 19 ஆம் நூற்றாண்டில் சமவுடைமைவாதம் தோற்றம் பெற்றது.
    E. ஜனநாயகத்துடன் இணைந்து தராள ஜனநாயக வாதம் தோற்றம் பெற்றது.
    1. ABCD 2. BCDE 3. ABCE 4. ABDE 5. ACDE

08. தேசியவாதம் தொடர்பில் சரியான சேர்மாத்தைத் தெரிவு செய்க.
    A. பொருளாதாரக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது.
    B. அரசாக ஒன்றினையக்கூடிய பொது அடையாளம் உள்ள சமூகத்தை கட்டியெழுப்புவதனை நோக்காகக் கொண்டது.
    C. மொழி, மதம், கலாச்சாரம் மற்றும் நிலப்பிரதேசம் தொடர்பில் பொதுச் சமூகமாக சிந்திக்கும்.
    D. இலத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா போன்ற இடங்களில பிரபல்யமானது.
    E. நவீன அரசுகள் தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்டே கட்டியெழுப்பப்பட்டுள்ளது.
    1. ABCD 2. BCDE 3. ABCE 4. ABDE 5. ACDE

09. அரசும் அரசாங்கமும் பற்றிய சரியான கூற்றைத் தெரிவு செய்க.
    1. ஆரம்பகால அரசியல் முறைமையில் அரசும் அரசாங்கமும் வெவ்வேறாகக் காணப்பட்டது.
    2. தாராள ஜனநாயக அரசின் ஒரு பிரதான பண்பு என்ற வகையில் அரசும் அரசாங்கமும் வேறுபடுத்தப்பட்டது.
    3. பிரசைகள் மீது அதிகாரம் வைத்திருக்க அரசுக்கு உரிமையுண்.
    4. அரசு அரசாங்கத்தின் முகவராக செயற்படும்.
    5. நிச்சயிக்கப்பட்ட ஆள்புலப் பிரதேசம் ஒன்று காணப்படமாட்டாது.

10. அரசியற் கட்சி என்பதற்கு பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.
    A. கொள்கைரீதியாக கருத்தியல்ரீதியான அடையாளங்கள் காணப்படுகின்றன.
    B. வாக்குரிமை , பிரதிநிதித்துவத்துடன் சேர்ந்து வளர்ச்சியடைந்தது.
    C. 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்றது.
    D. அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற அரசாங்கத்துக்கு மறைமுகமாக அழுத்தம் கொடுக்கும்.
    E. அங்கத்துவ அட்டைகளைக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்ட பிரிவாகும்.
    1. ABCD 2. BCDE 3. ABCE 4. ABDE 5. ACDE

11. அரசியல் கட்சி உபாயங்கள் தொடர்பாக பின்வருவனவற்றுள் பிழையானது.
    1. உறுப்பினர்களை ஆட்சேர்த்து நிதிதிரட்டும்.
    2. சேவை வழங்குனர், சேவை பெறுனருக்கிடையில் தொடர்பை ஏற்படுத்தும்.
    3. முதலாளித்துவ, தாராண்மை ஜனநாயக அரசியலின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டது.
    4. மக்களின் குறை நிரப்பியாகச் செயற்படும்.
    5. கட்சிகளின் ஒழுங்கமைப்பையும் கட்டமைப்பையும் பேணும்.

12. அமுக்கக் குழு தொடர்பாக பிழையான கூற்று.
    1. அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதனை நோக்காக் கொண்டு ஒழுங்கமைந்த குழு
    2. நலன்பேண் குழுக்கள் எனவும் அழைக்கப்படும்.
    3. சட்டம், கொள்கைகள்,தீர்மானங்களில் அழுத்தம் கொடுக்கும்.
    4. மேற்கத்தேய நாடுகளிலும், இலங்கையிலும் சங்கங்களாகக் காணப்படும்.
    5. வர்த்தகர்கள், கைத்தொழிலாளர்கள், மதக்குழுக்கள் போன்ற பிரிவுகளினால் இக்குழுவை உருவாக்கிக் கொள்ள முடியும்.

13. சிவில் சமூகம் தொடர்பாக சரியான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.
    A. அரசுக்கும் குடும்பத்துக்கும் இடையிலான தனிமனித செயற்பாடாகும்.
    B. முதலாளித்துவ சமூகத்துக்கு மாற்றீடாக பயன்படுத்தப்பட்டது.
    C. பொது நோக்கங்களுக்காக ஒன்றினைந்த பிரசைகளின் அமைப்பாகும்
    D. அரசியல் கட்சிகளோடு சேர்ந்து செயற்படும்.
    E. ஜனநாய அரசியலில் அரசியல் கட்சிகளுக்கு சமாந்திரமாக செயற்படுகின்றது.
    1. ABCD 2. BCDE 3. ABCE 4. ABDE 5. ACDE

14. ஒப்பீட்டு அரசியல் தொடர்பாக சரயான சேர்மானம் யாது?
    A. ஒவ்வொரு நாட்டினது அரசியல் செயல்கள், நடைமுறைகள் மற்றும் அதிகாரங்கள் தொடர்பாக ஒரு பொது முடிவுக்கு வருவதாகும்.
    B. இது முதன் முதலில் மக்கியாவல்லியினால் பயன்படுத்தப்பட்டது.
    C. தமது நாட்டின் அரசியலை தெளிவாக விளங்கிக்கொள்வதற்கு ஒப்பீட்டு அடிப்படையில் அரசியலைக் கற்க வேண்டும்.
    D. அரசறிவியலில் முக்கியம் பெறும் கருப்பொருட்கள் சர்வதேசரீதியாக ஒப்பீடுசெய்து கற்கப்படுகின்றன.
    E. ஐரோப்பா. அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளில் ஒப்பீட்டு அரசியல் ஒரு கல்வித்துறையாக வளர்ச்சியடைந்துள்ளது.
    1. ABCD 2. BCDE 3. ABCE 4. ABDE 5. ACDE

15. அமுக்கக்குழுவுக்கு ஆதரவான கருத்துக்களில் ஒன்று
    1. உயர்குழாம் பகுதியினரை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்கமைந்துள்ளது.
    2. தமது நலன்களுக்காக மட்டும் சுயநலத்துடன் செயற்படும்.
    3. மக்களின் குறைகள, தேவைகள், நலன்கள் போன்றவற்றை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரும்.
    4. அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு தீர்மானங்களுக்கு மூடிய ஒன்றாக காணப்படுகின்றது.
    5. அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதனை நோக்காக் கொண்டு செயற்படும்.

(2x15 = 30 புள்ளிகள்)

பகுதி B

1. 1 அரசியல் தத்துவம் 20ஆம் நூற்றாண்டில் பின்னடைவைச் சந்தித்தமைக்கான காரணம் ஒன்று தருக.
   .....
   .....
   2. " நீதி தொடர்பான கோட்பாடுகள்" என்ற நூலை எழுதிய சிந்தனையாளர் யார்?
   .....

2. 20ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற இலட்சியவாதக் கோட்பாடு இரண்டைக் குறிப்பிடுக.
   1.....
   2.....

3. அரசியல் கருத்தியல்களின் பணபுகள் இரண்டைக் குறிப்பிடுக.
   1.....
   .....
   2.....

4. சகல சமூகங்களிலும் அடிப்படையானதும் மையமானதுமான அரசியல் நிறுவனங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
   1.....
   2.....

5. அரசியல் கட்சிகளின் பொதுவான வகைப்படுத்தலில் இரண்டைக் குறிப்பிடுக
   1.....
   2.....

6. அரசியல் கட்சிகள் வளர்ச்சியடையக் காரணமாக அமைந்த பிரதான இரு விடயங்களையும் குறிப்பிடுக.
   1.....
   2.....

7. அமெரிக்காவில் அமுக்கக்குழுக்கள் எப்பெயர்களால் அழைக்கப்பட்டது இரண்டைக் குறிப்பிடுக
   1.....
   2.....

8. அமுக்கக்குழுக்களுக்கு சார்பாக முன்வைக்கப்பட்ட வாதங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
   1.....
   2.....

9. சிவில் சமூகம் பற்றி பழம் தாராண்மைக் கருத்துக்களை முன்வைத்த சிந்தனையாளர்கள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.
   1.....
   2.....

10. ஒப்பீட்டுரீதியாகக் கற்கப்படும் விடயங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
    1.....
    .....
    2.....
    .....

(2x10 = 20 புள்ளிகள்)

பகுதி II

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

01. எவையேனும் ஒரு வினாவுக்கு மட்டும் விடையளிக்குக.
    1. அரசியல் நிறுவனங்களின் மையமான அரசையும் அரசாங்கத்தையும் ஆராய்க
    2. நவீன ஜனநாயகத்தில் அரசியல் கட்சிகளின் பங்கினை ஆராய்க.
    3. சமூக அரசியல் வாழ்வில் அமுக்கக்குழுவின் பங்கு யாது என ஆராய்க

(1X20= 20 புள்ளிகள்)

02. எவையேனும் இரண்டை பரிசீலிக்குக
    1. அரசியல் கட்சிகளுக்கும் அமுக்கக்குழுக்களுக்கும் இடையிலான வேறுபாடுகள்
    2. அமுக்கக்குழுக்களுக்கு சார்பான மற்றும் எதிரான வாதங்கள்.
    3. ஜனநாயக அரசில் ஒப்பீட்டு அரசியலின் வகிபங்கு யாது?

(2X5= 10 புள்ளிகள்)

03. எவையேனும் இரண்க்கு சிறுகுறிப்பு எழுதுக.
    1. அரசியல் தத்துவம்
    2. அரசியல் கருத்தியல்
    3. அரசியல் கோட்பாடுகள்
    4. சிவில் சமூகம்

(2X10= 20 புள்ளிகள்)

விடைகள்

1 - 4 2 - 4 3 - 5 4 - 2 5 - 2 6 - 3 7 - 3 8 - 2 9 - 2
10 - 3 11 - 4 12 - 1 13 - 3 14 - 5 15 – 3

01.

1. விஞ்ஞானரீதியான எதிர்வாதங்கள் தோற்றம் பெற்றமை
2. ஜோன் ரோல்ஸ்

02.

- சட்டம் தொடர்பாக ஜோன் ரோல்ஸின் கோட்பாடு
- சமூக ஒப்பந்த பரிமாற்றம் தொடர்பாக ஹெபர்மஸின் கோட்பாடு
- குடியரசுவாதம் தொடர்பாக பிலிப் பெட்டியின் கோட்பாடு

03.

- ஒவ்வொரு கருத்தியலும் வெவ்வேறுபட்ட கருத்தியலினாலானது.
- சமூகத்தின் வெவ்வேறு பிரிவுகளினால் அரசியல் அறிவு , நம்பிக்கை மற்றும் நோக்குகளை உருவாக்குவதாக இருக்கும்
- சமூக பரிவுகளை அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கான வாய்ப்பைக் கொண்டிருக்கும்.

04. அரசு, அரசாங்கம்

05.

- தனிக்கட்சி
- இருகட்சி
- ஆதிக்கமுள்ள கட்சி
- ஆதிக்கமுள்ள இருகட்சி
- பலகட்சி

06. வாக்குரிமை, பிரதிநிதித்துவம்

07.

- நலன்பேண் குழுக்கள்
- ஆதரவு திரட்டும் குழுக்கள் / நியாயப் பிரச்சாரக் குழுக்கள்

08.

- மக்களின் குறைகள், நலன்கள், தேவைகளை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவருதல்
- மக்களின் குறை நிரப்பியாக செயற்படுதல்
- கொள்கைத் தீர்மானங்களில் அரசாங்கத்தின் தன்னிச்சையான துலங்களுக்கு தடையாக இருத்தல்.

09. இமாணுவேல் காண்ட, பிரடரிக் ஹெகல்

10.

- நாடுகளுக்கிடையிலான ஒப்பீடுகளை மேற்கொள்ள உதவுதல்.
- நாடுக்குள்ளேயே காணப்படும் கருத்தியல்களை ஒப்பீடு செய்தல்
- அரசியலில் முக்கிய கருப்பொருட்களை சர்வதேச ரீதியாக ஒப்பீடு செய்தல்